10.03.2026.
DVC.1/2023

எ.ம.சா.1 சாகுல் அமீது, த/பெ.சுலைமான்.

எனது தரப்பு ஆவணங்களாக 1) நிக்கா பதிவு சான்றிதழ் -நகல் (மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) 2) மதுரை பேட்டை ஜமாத்தார்கள் அனுப்பிய தலாக் பற்றிய அறிவிப்பு நகல் - அசல். 3) மனுதாரர் மதுரை மாவட்ட சமூக நலத்துறை அலுவலரிடம் கொடுத்த புகார் மனுவின் நகல். 4) மதுரை மாவட்ட சமூக நலத்துறை அலுவலகத்தில் இருந்து எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணை - அசல். 5) மனுதாரரால் எதிர்மனுதாரருக்கு 20.05.2021ம் தேதி அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு - அசல். 6) பொது தகவல் அலுவலரினால் வழங்கப்பட்ட தகவல் மற்றும் கடிதம் - சான்றிட்ட நகல். மேற்படி ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்யவேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.**

எனக்கும் மனுதாரருக்கும் எந்த தேதியில் திருமணம் நடைபெற்றது என்றால் எனக்கு தேதி ஞாபகம் இல்லை. திருமணம் எங்கு நடைபெற்றது என்றால் மதுரையில் நடைபெற்றது. திருமணத்திற்காக மட்டும்தான் மதுரை சென்றோம் என்றால் சரிதான். நான் திருமணத்திற்கு முன்பும் தற்போதும் வந்தவாசியில்தான் வசித்து வருகிறேன். திருமணத்திற்க முன்பு நான் என்ன வேலை செய்து வந்தேன் என்றால் கே.எம்.பாட்ஷா ஸ்டோரில் கூலி வேலை செய்து வந்தேன். கே.எம்.பாட்ஷா என்பவர் எனது அக்காவின் கணவர் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பு நான் எனது மாமா வீட்டில்தான் தங்கி சாப்பிட்டு வேலை செய்துவந்தேன் என்றால் சரிதான். திருமணம் முடிந்த அன்றைய தினமே வந்தவாசிக்கு வந்துவிட்டோம் என்றால் சரிதான்.

மனுதாரர் எனக்கு என்ன உறவு முறை என்றால் தாய் மாமன் மகள் ஆவார். திருமணத்திற்கு மனுதாரருக்கு 100 சவரன் நகைபோட்டுதான் திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் நகை எதுவும் போடவில்லை. திருமணத்தின்போது மனுதாரரும் நானும் சேர்ந்து போட்டோ எடுத்துக்கொண்டோமா என்றால் இல்லை. சுமார் ஒருவருடம் வரை நானும் மனுதாரரும் எனது அக்கா, மாமா வீட்டில்தான் குடும்பம் நடத்தினோம் என்றால் சரிதான். அதன் பின்னர் வந்தவாசி காதர்மீரா தெருவில் வாடகை வீட்டில் வசித்து வந்தோம் என்றால் சரிதான். அந்த வீடு கே.எம்.எ.பீர்முகமது என்பவருக்கு சொந்தமானது என்றால் சரிதான். அந்த வீட்டில் எத்தனை ஆண்டுகள் குடும்பம் நடத்தினோம் என்றால் சுமார் 3, 4 ஆண்டுகள் குடும்பம் நடத்தினோம். அந்த காலகட்டத்திலும் எனது மாமா கடையில்தான் வேலை பார்த்து வந்தேன் என்றால் சரிதான்.

மேற்படி வாடகை வீட்டில்தான் எனது பெரிய மகன் பிறந்தார் என்றால் சரிதான். அதன் பிறகு எங்கு குடும்பம் நடத்தினோம் என்றால் மீரா காதா ஷா தெருவில் குடியிருந்து வந்தோம். அந்த வீட்டில் எண்.7எ என்றால் சரிதான். எனது பெரியமகன் ஷாஜித் இம்ரான் வந்தவாசியில் பிறந்ததற்கான பிறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது பெரிய மகன்

கற்பத்தில் இருந்தபோது சீமந்தம் செய்தோமா என்றால் இல்லை. மனுதாரர் வீட்டில் இருந்து வந்து மனுதாரரை பிரசவத்திற்காக அழைத்துச்சென்றனர். அந்த சமயத்தில் காதர்மீரா தெருவில்தான் குடியிருந்து வந்தோம் என்றால் சரிதான். மனுதாரரை முதல் பிரசவ காலத்திற்கு அழைத்துச்சென்றபோது நாங்கள் எனது அக்காவீட்டில் குடியிருந்தோமா அல்லது காதர்மீரா தெருவில் குடியிருந்தோமா என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. எனது மூத்த மகன் பிறந்த தேதி தெரியுமா என்றால் தேதி எனக்கு ஞாபகம் இல்லை ஆனால் மதுரையில்தான் பிறந்தார். எத்தனை மாதங்கள் கழித்து மனுதாரரை நாங்கள் குடியிருந்த காதர்மீரா தெரு வீட்டிற்கு அழைத்து வந்தேன் என்றால் சுமார் 4, 5 மாதங்கள் இருக்கும். எனது 2வது மகன் எந்த வீட்டில் இருந்தபோது பிறந்தான் என்றால் மீரா காதர் தெரு வீட்டில்தான் பிறந்தார். மீரா காதர் தெருவில் உள்ள வீடு நான் கட்டிய வீடுதான் என்றால் சரிதான். அந்த வீடு உள்ள இடம் காதர் மொய்தீன் ஆசிரியரின் மாமனார் இப்ராகிம் அஜிரத் என்பவரிடம் வாங்கப்பட்டது என்றால் சரிதான்.

மேற்படி வீடு கட்டிய சமயத்தில் நான் என்ன வருமானத்தினை கொண்டு கட்டினேன் என்றால் நானும் சேட்டு என்பவரும் சேர்ந்து கூட்டாக மகா ராஜா சூப்பர் மார்கெட் நடத்தி வந்த வருமானத்தின் மூலமும் மற்றம் கடன் பெற்றும் கட்டினேன். மேற்படி சூப்பர் மார்கெட்டிற்கு எவ்வளவு நான் முதலீடு செய்தேன் என்றால் நானும் சேட்டுவும் தலா 2 1/2 லட்சம் முதலீடு செய்தோம். மேற்படி எனது முதலீடு பணம் 2 1/2 லட்சம் எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் நான் கடன் வாங்கி கே.எம்.பாட்ஷா கடையை வாங்கினேன், பின்னர் அந்த கடையை விற்று வந்த பணத்தின்மூலம் முதலீடு செய்தேன். நான் கடன் வாங்கியதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

நான் கடன் வாங்கி கே.எம்.பாட்ஷா கடையை வாங்கி பின்னர் அதனை விற்றுவிட்டதாக சொன்ன விவரத்தினை எனது எதிர்மனுவிலோ அல்லது நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. மனுதாரரின் நகைகளை விற்றுதான் வீட்டு மனையை வாங்கி வீடு கட்டினேன் என்றால் சரியல்ல. மகா ராஜா சூப்பர் மார்கெட் கடையை ஆரம்பித்த பிறகுதான் வீடு கட்டினேனா என்றால் ஆமாம். மேற்படி நான் கட்டிய வீடும், அந்த வீட்டு மனையையும் மொத்த மதிப்பு ரூ.20./ லட்சம் ஆகும். அதனை கடன் வாங்கிதான் செலவு செய்தேன். சூப்பர் மார்க்கெட்டின் வருமானத்தில் இருந்து வீடு கட்டவில்லையா என்றால் வருமானத்தின் மூலமும் மற்றும் கடன் வாங்கியும் கட்டினேன். எவ்வளவு ரூபாய் கடன் வாங்கினேன் என்றால் 8, 9 லட்சம் வாங்கினேன். மேற்படி ரூ-20-/ லட்சத்தில் கடன்போக மீதி பணம் கடையின் வருமானம்மூலம் செலவு செய்தேன் என்றால் சரிதான். மேற்படி கடை வருமானத்தில் இருந்து வீடு கட்டுமான செலவிற்கு தினமும் பணம் எடுத்துக்கொண்டு கணக்கு எழுதி வைப்பேன். அவ்வாறு கடை வருமானத்தின்மூலம் நான் வீடு கட்டிய விவரம் கடையின் மற்றொரு கூட்டாளியான சேட்டு என்பவருக்கு தெரியுமா என்றால் தெரியும். கடைக்கு வருடா வருடம் வரவு செலவு கணக்கு பார்ப்போமா என்றால் இல்லை.

மேற்படி கடையின் கூட்டாளியான சேட்டு என்பவர் எனக்கு சம்மத கடிதம் ஏதும் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. சூப்பர் மார்கெட்டின் கூட்டு வியாபாரத்தை எப்போது நிறுத்தினோம் என்றால் 2011, 2012 இருக்கும். எழுத்துமூலமாக எழுதி பிரித்துக்கொண்டோமா என்றால ் இல்லை வாய்மொழியாக பிரித்துக்கொண்டோம். எவ்வளவு ரூபாய் பிரித்துக்கொண்டோம் என்றால் லாபம் இல்லை. நான் சொல்வதுபோல் கடன் எதுவும் வாங்கவில்லை என்றாலும், மேலும் சூப்பர் மார்கெட்டில் இருந்து லாபம் ஏதும் வரவில்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் 20/-லட்சம் ரூபாய் பிரித்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. அதேபோல் மகாராஜா என்ற மெடிக்கல் கூட்டாக நடத்தி வந்தோம் என்றால் சரியல்ல அதனை எனது அக்கா மகன் நடத்தி வந்தார். அந்த மெடிக்கல் மூலமும் ரூ.5/-லட்சம் ரூபாய் லாபம் பிரித்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. நான் விலகியபிறகு சேட்டு என்பவர் மகாராஜா சூப்பர் மார்கெட்டை நடத்தி வந்து தற்போது 2 வருடமாகதான் மகாராஜா மளிகை கடை நடத்தி வருகிறார் என்றால் கடனுக்காக சிறிது காலம் சூப்பர் மார்கெட் நடத்தி வந்தார். நானும் எனது கூட்டாளியுமான சேட்டு என்பவர் பிரித்துக்கொண்ட விவரத்தினை எதிர்மனுவிலோ நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை.

தற்போது நான் ராணிபேட்டை மாவட்டம், பனப்பாக்கம் கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். 2012ம் ஆண்டு கூட்டு வியபாரத்தில் இருந்து விலகிய பிறகு பனப்பாக்கத்தில் செட்டில் ஆகிவிட்டேன் என்றால் சரியல்ல 2 வருடம் வந்தவாசியில் அரிசி கடை வைத்திருந்தேன். 2014-க்கு பிறகுதான் பனப்பாக்கத்திற்கு சென்றேன். அந்த ஊரில் 2வதாக திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. நான் மட்டும்தான் தனியாக இருந்து வருகிறேனா என்றால் எனது அக்கா மகன்களுடன் உள்ளேன். மேற்படி விவரத்தினை எனது எதிர்மனுவில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. எனக்கு மகா ராஜா சூப்பர் மார்கெட் நடத்தி வந்த சமயத்தில் ஒரு பெண்ணுடன் பழக்கம் ஏற்பட்டு அவரை திருமணம் செய்துகொண்டு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. அதனால்தான் குடும்பத்தில் பிரச்சனை ஏற்பட்டு எனக்கும் மனுதாரருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்து சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல கருத்து வேறுபாடு அதற்காக ஏற்படவில்லை. மகன்கள் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டதால் என்னை துரத்திவிட்டனர். மேற்படி எனது மகன்கள் துரத்திவிட்ட விவரத்தினை எனது எதிர்மனுவிலோ அல்லது நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை ஜீவனாம்ச வழக்கில் குறிப்பிட்டுள்ளேன். வந்தவாசி மீரா காதர் தெருவில் கதவு எண்.7/எ எனக்கு சொந்தமான வீட்டில் மனுதாரரும், எனது மகன்களும் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த வீட்டில் தற்போதுவரை மனுதாரர்தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான் அதற்கான வரிகளை நான்தான் செலுத்தி வருகிறேன். யார் பெயரில் வரி செலுத்தி வருகிறேன் என்றால் என் பெயரில்தான் செலுத்தி வந்தேன் அதனை விற்ற பிறகு திலவர் பாஷா என்பவர் செலுத்தி வருகிறார். மேற்படி வீட்டிரை 26.02.2020ம் தேதி மேற்படி திலவர் பாஷா என்பவருக்கு ரூ.22,97,000/-க்கு கிரையம் செய்தேன் என்றால் சரிதான்.

பொதுவாக கிரையம் வாங்குபவர்கள் சுவாதினத்துடன்தான் வாங்குவார்கள் என்றால் அது கிரையம் வாங்குபவரின் விருப்பத்தை பொறுத்தது. நான் எழுதிகொடுத்த கிரைய பத்திரத்தில் சுவாதீனம் கொடுத்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கிரைய பத்திரம்தான் நான் எழுதிகொடுத்தேன் என்றால் சரிதான். அது ம.த.சா.ஆ.1 ஆகும். அந்த கிரைய பத்திரம் எழுதிகொடுத்த சமயத்தில் நான் ராணிபேட்டை மாவட்டத்தில்தான் குடியிருந்து வந்தேன் என்றால் சரிதான். நான் சுவாதீனம் கொடுக்காமல் கிரையம் கொடுத்ததால் மேற்படி திலவர்பாஷா சுவாதீனம் கோரி ஆரணி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.23/2021 தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.2 ஆவணத்தில் மனுதாரருக்கு முத்தலாக ் கூறிவிட்டதாக சாகுல்அமீது கடிதம ் அனுப்பியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மனுதாரருக்கு தலாக் கூறியதாக ஜமாத்திற்கு அனுப்பிய கடிதத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வதுபோல் மனுதாரரிடம் தலாக் சொல்லவில்லை என்றாலும் நான் மேலும் ஜமாத்திற்கு கடிதம் அனுப்பவில்லை என்றாலும் சரியல்ல.

மனுதாரா் 20.05.2021ம் தேதி கொடுத்த அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் கொடுத்துள்ளேன். எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் எனக்கு தேதி ஞாபகம் இல்லை, ஆரூன் ரசித் வழக்கறிஞா்மூலம் அனுப்பினேன். மேற்படி பதில் அறிவிப்பினை எனது தரப்பில்ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை நான் சொல்வதுபோல் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 2014ம் ஆண்டு நான் மனுதாரரைவிட்டு பிரிந்த பிறகு மனுதாரருக்கு வாழ்க்கை பொருள் உதவி ஏதும் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை எனது மகன்கள் சம்பாதித்து மனுதாரரை பராமரிக்கிறார்கள். மனுதாரரை ஒரு கணவனாக பராமரிக்கும் பொறுப்பு உள்ளது என்றால் உள்ளது ஆனால் தலாக்கிற்கு பிறகு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. நான் சொல்வதுபோல் மனுதாரரை சட்டப்படி தலாக் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனைவியை தலாக் செய்திருந்தாலும் ஜீவனாம்சம் கொடுக்கவேண்டியது இல்லையென்று சட்டம் கூறவில்லை என்றால் ஷரியத் சட்டப்படி கொடுக்கவேண்டியது இல்லை. எனது பெயரில் உள்ள மனுதாரா் குடியிருக்கும் நான் கிரையம் செய்த வீட்டிற்கு ரூ.22,97,000/- வாங்கினேன் என்றால் சரிதான் ஆனால் அதனை கொண்டு கடனை அடைத்துவிட்டேன். நான் சொல்வதுபோல் எந்தவித கடனும் இல்லையென்றாலும் போதுமான பணம் இருந்தும் நான் மனுதாரரை பராமரிக்காமல் தவிா்த்து வருகிறேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு கணவனாக ஜீவனாம்சம் கொடுக்க நான் கடமைபட்டவன் என்றால் சரியல்ல.

// உண்மை நகல் //

மனுதாரர் குடியிருக்கும் வீட்டில் மனுதாரர் தொடர்ந்து குடியிருக்க உரிமையுள்ளது என்றால் சரியல்ல அது எனது பெயரில் இல்லை. நான் மனுதாரரையும் தனது மகன்களையும் ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் பணம் வாங்காமலே கிரையம் எழுதிகொடுத்தேன் என்றால் சரியல்ல அதனால்தான் கிரையம் பெற்றவருக்கு சுவாதீனம் கொடுக்கவில்லை என்றால்சரியல்ல. மனுதாரருக்கு ஜீவனாம்சம் கொடுக்கவேண்டியது கடமை என்றால் சரியல்ல.

// **உண்மை நகல்** //

Taken down by me in Open Court,
Read over to the witness and Admitted
by him/her to be correct.

Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.